R4892

# SONGS IN THE NIGHT

# இரவின் கீதங்கள்

சங்கீதம் 85

"கர்த்தர் நமக்கு பெரிய காரியங்களைச் செய்தார்; இதனிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்." சங்கீதம் 126:3

நாம் இன்னும் அழுகையின் இரவில் தான் இருக்கிறோம். வியாதி, வருத்தம், தவிப்பு மற்றும் மரணம் தொடர்கிறது. இது மேசியாவின் ராஜ்யத்தின் மகிமையான காலை வரை தொடரும். அப்பொழுது பூமிக்கு மகிமையான மாற்றம் வரும் என்பதை நாம் அறிந்து கொண்டிருப்பதால் நாம் எவ்வளவு சந்தோஷம் அடைகிறோம்! தீர்க்கதரிசி தாவீது இந்த கருத்தைப் பற்றி கூறுவதாவது: "சாயங்காலத்திலே அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்." (சங்கீதம் 30:5) இந்த கருத்தையே பரிசுத்த பவுல் அறிவித்தார் "தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தரித்து பிரசவ வேதனைப்படுகிறது." (ரோமர் 8:22) மகிமையடைந்த தேவனுடைய புத்திரர் அவர்களது கர்த்தரோடு இணைந்து இம்மானுயேலின் ராஜ்யத்தை அமைப்பார்கள்.

தற்காலத்தில் தேவனுடைய இந்த புத்திரர் மனிதரிடையே அறியப்படாமல் அல்லது அங்கீகரிக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் சொந்த ஜனங்களாக அடிக்கடி எண்ணப்படுகிறார்கள். ஏனெனில் அவர்கள் நீதி, சத்தியம் மற்றும் தேவனிடத்தில் வைராக்கியம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். "பிரியமானவர்களே, இப்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். இனி எவ்விதம் இருப்போம் என்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிறவண்ணமாக நாம் அவரை தரிசிப்பதினால் நாம் அவருக்கு ஒப்பாயிருப்போம் என்று நாம் அறிந்திருக்கிறோம்." நாம் அவரது கனம், மகிமை மற்றும் சாகாமையில் பங்கு பெற்று பூமியிலுள்ள சகல கோத்திரத்தாருக்கும் தெய்வீக ஆசீர்வாதங்களை வழங்குவோம்.

### "இரட்சணியப் பாடல்"

நமது பாடமாகிய 85ஆம் சங்கீதம் அநேக பிரயோகங்களை பெற்றிருக்கிறது. இவைகளில் முதலாவது இஸ்ரயேலர் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து விடுதலையடைவது. கோரேஸ் ராஜா விருப்பம் உள்ளவர்கள் பலஸ்தீனாவுக்கு திரும்பி செல்லலாம் என்று அனுமதித்த போது இது நடந்தது. ஐம்பத்தி மூவாயிரம் பேர் இந்த சலுகையை பயன்படுத்திக்கொண்டு அவனது உதவியையும் பெற்றார்கள். தேவனுடைய கிருபையை இழந்து மறுபடியும் அவரது கிருபையையும் ஆசீர்வாதத்தையும் திரும்ப பெற்றதில் ஜனங்கள் களிகூர்ந்தார்கள். அவர்களது மீறுதல்கள் மன்னிக்கப்பட்டதற்கு தேவனுடைய சலுகை கிடைத்தது நிரூபணமாக இருந்தது.

கீதத்தின் இரண்டாவது பிரயோகம் நமக்கு முன்பாக இருக்கிறது. கடந்த பதினெட்டு நூற்றாண்டுகளாக இஸ்ரயேல் தேசம் கிறிஸ்தவ தேசங்களின் சிறையிருப்பில் இருந்திருக்கிறது. அது ஒரு பெரிய விடுதலையைக் குறித்து வாக்குத்தத்தை பெற்றிருக்கிறது. அவர்கள் சொல்லர்த்தமான பாபிலோனிலிருந்த பாலஸ்தீனாவுக்கு திரும்புவதற்கு விடுதலையைக் கொடுத்த கோரேஸ் ராஜா மகா மேசியாவுக்கு ஒரு முன்னடையாளமாக இருக்கிறான். மேசியா, தேவனுடைய பழங்கால ஜனங்கள் அவரது சலுகைக்கு திரும்புவதற்கு முழுமையான சுதந்தரத்தை கொடுக்க இருக்கிறார். இஸ்ரயேலுக்கு வரக்கூடிய இந்த விடுதலையை பரிசுத்த பவுல் ரோமர் 11:25-29இல் குறிப்பிடுகிறார். இரட்சகர் அவர்களை கூட்டிச் சேர்ப்பதற்கு மேலாக செய்வார். 85ஆம் சங்கீதம் கூறுகிறதைச் செய்வார். அப்போஸ்தலரும் இது குறித்து கூறுவதாவது: "அவர்களது பாவங்களை அவர்களை விட்டு நீக்கும் போது நான் அவர்களோடு செய்யும் உடன்படிக்கையாக இது இருக்கிறது." (எபிரேயர் 8:8-11; எரேமியா 31:31-34)

உலகத்தின் பாவங்கள் இன்னும் நீக்கப்படாதிருக்கிறது போல இஸ்ரயேலின் பாவங்களும் இன்னும் நீக்கப்படவில்லை. மகா இரட்சகர் பாவங்களுக்காக உண்மையிலேயே மரித்திருக்கிறார். மேலும் அவர் பாவிகளுக்கு சிநேகிதராயிருக்கிறார். ஆனால் அவர் சபைக்காக, நமக்காக மட்டுமே தேவனுடைய பிரசன்னத்தில் தோன்றியிருக்கிறார். உலகத்திற்காக அல்ல. அவர் சபைக்கு மட்டுமே பரிகாரி. நீதியை சிநேகித்து அக்கிரமத்தை வெறுக்கிற, தேவனை நெருங்க விரும்புகிற இந்த பரிசுத்தவான்களுக்கு மட்டுமே அவர் பரிந்து பேசுவார்.

பாவம் மற்றும் மரணம் என்கிற இரண்டு ஏகாதிபத்தியத்திற்கு உலகமானது அடிமைப்பட்டிருக்கிறது. இப்பொழுது அவைகள் ஆண்டு மனுக்குலத்தை வேதனைப்படும்படி செய்கிறது. இந்த அடிமைத்தனத்தின் நிலைமையில் நாம் பிறந்தோம். வேதவாக்கியங்கள் கூறுகிறதாவது: "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்." நமது இனம் பலவீனங்களினால் வேதனைப்படுகிறது. இப்படியாக நாம் சுதந்தரித்திருக்கின்ற மனம் சார்ந்த, ஒழுக்கம் சார்ந்த மற்றும் உடல் சார்ந்த அபூரணங்களில் வேதனைப்படுகிறது; பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட விடுதலைக்காக ஏங்குகிறது. பெரும்பான்மையான மனுக்குலம் அவைகளின் அடிமைத்தனத்தை உணருகிறார்கள். விடுதலை அடைவதில் சந்தோஷப்படுவார்கள்.

மெய்யான கோரேஸ் மாபெரும் இரட்சகராக இருக்கிறார். அவர் சீக்கிரத்தில் வானத்தின் கீழெங்கும் ஜெயங்கொண்டு அவரது ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். சீக்கிரத்தில் சபை வகுப்பார் "தெரிந்துகொள்ளப்பட்ட" பரிசுத்தவான்கள் மகிமைப்படுத்தப்படுவார்கள். அதன்பிறகு தெரிந்து கொள்ளப்படாதவர்களின் ஆசீர்வாதத்திற்கான காலம் வரும். அதாவது மனுக்குலத்தின் பூரணத்திற்கும் உலகளாவிய சொர்க்கத்திற்குமான மறுசீரமைப்புக்கு வருவார்கள். இதை மேசியாவின் ராஜ்யமும் ஆற்றலும் ஏற்படுத்தும். எல்லா சத்துருக்களையும் தமது பாதத்திற்கு கீழாக்கிப் போடும் வரைக்கும் அவர் ஆளுகை செய்ய வேண்டியது. பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம். மரணம் அழிக்கப்படும்; ஷியோல், ஹேடஸ், பிரேதக்குழி மரித்தோரின் உயிர்தெழுதலினால் அழிக்கப்படும். "அவனவன் தன்தன் வரிசையில் உயிர்ப்பிக்கப்படுவான்."

## “அவர் கொடுக்கிற இரவின் கீதங்கள்”

சர்வ சிருஷ்டியும் பாவம் மற்றும் துக்கத்தின் சுமையினால் வேதனைப்படும் போது, பரிசுத்தமான சிலர் இந்த வாழ்க்கையின் துக்கத்தின் மத்தியிலும் பாடவும் களிகூரவும் செய்வார்கள். இன்னும் அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக அல்லது முழுவதுமாக பாவத்தின் பலன்களில் பங்கு பெற்றார்கள். அவர்களது சந்தோஷத்திற்கான இரகசியம் இரண்டு. (1) தேவனுடன் ஒப்புரவாகுதலை அவர்கள் அனுபவித்திருக்கிறார்கள். (2) அவர்கள் தங்களது சித்தத்தை தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். இந்த புதிய உறவை, இரட்சகர் மேல் வைத்த விசுவாசத்தினால், அவரது பாவநிவர்த்தி செய்கிற இரத்தத்தின் மேல் வைத்த விசுவாசத்தினால் அவர்கள் பெற்றார்கள். அவர்கள் தங்களால் முடிந்தவரை தெய்வீக சித்தத்தை செய்வோம் என்கிற உடன்படிக்கை மற்றும் தங்கள் சித்தங்களை அர்ப்பணித்தல் மூலமாக, தேவனிடம் “இடுக்கமான வாசல்” வழியாக “நெருக்கமான வழியில்” தேவனுடனான அர்ப்பணத்திற்குள் நுழைந்தார்கள்.

தேவனுடைய சித்தத்திற்கு இந்த அர்ப்பணமும், தங்களது வாழ்க்கையின் சகல காரியங்களும் தேவனிடத்தில் இருக்கிறது. அவரது மேற்பார்வையில் இருக்கிறது என்கிற உணர்வும் இருதயத்துக்கு இளைப்பாறுதலை தருகிறது. இந்த அர்ப்பண நிலைமையில் ஒரு சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் பெற்றிருக்கிறார்கள். தங்கள் இருதயத்தில் தேவனுக்கான மரியாதை மற்றும் தங்கள் வாழ்க்கையின் கீழ்ப்படிதலை அசட்டை செய்து தங்களது சொந்த விருப்பத்தை திருப்திபடுத்த நாடின போது இதை அவர்கள் அறியவில்லை.

அதே போல, தேவன் அவரது தெய்வீக நோக்கங்களின் அறிவை அவர்களுக்கு கொடுத்து, வரக்கூடிய காரியங்களை கவனிக்கிறபடியால் இவர்கள் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் தேவனுக்கு நன்றியின் கீதங்களையும் பெற்றிருக்கிறார். இவர்கள் தற்கால சோதனைகள் மற்றும் துன்பங்களுக்கு அப்பால், தற்கால பாடுகளுக்கு பின்னர் வரும் மகிமைகளைக் காண்கிறார்கள். சகல தேசங்களிலும் சகல சபைகளிலும் இருக்கும் சில பரிசுத்தவான்களாகிய சபையானது தேவனுடைய எதிர்கால சுதந்தரர்கள்; இவர்கள் கனம், மகிமை மற்றும் சாகாமையின் சுதந்தரர்களாக இரட்சகருடன் இணைந்து அவரது மகிமையான ராஜ்யத்தில் இருப்பார்கள். இது அவர்களை உற்சாகப்படுத்துகிறது. மேலும் இவர் பூமியின் சகல கோத்திரங்களையும் ஆசீர்வதிக்கும் தெய்வீக திட்டத்தின் சுருக்கத்தையும் (Outlines) காண்கிறார்கள். தேவன் பரிசுத்தவான் அல்லாத அவருடையவர்கள் மற்றும் உலகத்தின் முழு மனுக்குலத்தின் மேலும், இவர்களில் சிலர் பரிசுத்தவான்களாக இருக்கிறவர்கள் மேல் பிரியமாயிருக்கிறார் என்பதை அவர்கள் உணரும் போது அது அவர்களை சந்தோஷப்படச் செய்கிறது. கிறிஸ்து மற்றும் மகிமையடைந்த சபை மூலமாக பூமியின் சகல கோத்திரத்தாரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதை அவர்கள் உணரும் போது, அது அவர்களை அவர்களது யாத்திரையின் வீட்டிலே மகிழச் செய்யும். அவர்கள் மானிட சுபாவத்திலிருந்து தெய்வீக சுபாவத்திற்கு தங்கள் சொந்த மாற்றத்திற்கு காத்திருக்கிறார்கள்.